# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணாசாலை, கிண்டி, சென்னை– 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல்முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை: மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 71/மா/2023**

**நாள்: 03.05.2023**

திருமதி M.இந்திராதேவி, G.மாரீஸ்வரன்
திருத்தங்கல், சிவகாசி – முறையீட்டு மனுதாரர்கள்

ஆணையர், சிவகாசி மாநகராட்சி,
சிவகாசி – எதிர்மனுதாரர்

சிவகாசி, திருத்தங்கல், சுப்பிரமணியர் கோவில் முதல் தெரு, கதவு எண்.6/4 என்ற முகவரியில் வசிக்கும் திருமதி M.இந்திராதேவி, திரு. G. மாரீஸ்வரன் ஆகியோரது 21.03.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 23.03.2023–ல் பெறப்பட்டு 71/மா/2023 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட மனுதாரரது மனு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தால் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

<u>ஆணை</u>

சிவகாசி, திருத்தங்கல், சுப்பிரமணியர் கோவில் முதல் தெரு, கதவு எண்.6/4 என்ற முகவரியில் வசிக்கும் திருமதி M.இந்திராதேவி, திரு. G. மாரீஸ்வரன் ஆகியோர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள 21.03.2023 நாளிட்ட தங்களது மனுவில்:

" நாங்கள் சிவகாசி மாநகராட்சி 5–வது வார்டு மாமன்ற உறுப்பினராக பொதுமக்களுக்கு தொடர்ந்து நேர்மையான முறையில் பணியாற்றிக்கொண்டிருக்கிறோம். அதாவது, மாநகராட்சியில் நடக்கும் எந்த ஒரு வேலைக்கும் 1 ரூபாய் கூட லஞ்சமாக அதிகாரிகளுக்கு போய் சேராமலும் மற்றும் 1 ரூபாய் கூட கமிசனாக நாங்களும் வாங்காமலும் மக்களை அங்கும் இங்கும் என அலையவிடாமல் நாங்களே அலைந்து திரிந்து சம்மந்தப்பட்ட அதிகாரிகளிடம் போராடி எங்களது வார்டு மக்களுக்கு பெற்றுத்தந்து மக்கள் பணி செய்து கொண்டிருக்கிறோம்.

அப்படி இருக்கும்பட்சத்தில் எங்களது 5–வது வார்டைச் சார்ந்த திரு M.ஜெயப்பாண்டி மற்றும் திரு, R.கோவிந்தராஜ் ஆகியோர் வீட்டுத்தீர்வை பெயர் மாற்றம் செய்வதற்காக நமது சிவகாசி மாநகராட்சிக்கு விண்ணப்பித்து அதற்கு உண்டான கட்டணமும் செலுத்தி இன்றுடன் 1 வருடத்திற்கும் மேல் ஆகிவிட்டது. இதற்கு உண்டான கட்டண ரசீதுகள் என அனைத்தும் இத்துடன் இணைத்துள்ளோம். ஆனால் அவர்களுக்கு இன்றுவரை பெயர்மாற்றம் செய்து

தரப்படவில்லை. எங்களது வார்டை சார்ந்த இவர்கள் இருவரும் நமது மாநகராட்சி அலுவலகத்திற்கு பலமுறை வந்து சம்பந்தப்பட்ட பில் கலெக்டர்களான திருமதி.கோமளா தேவி மற்றும் திரு.அகமது உமர் ஆகியோரிடம் கேட்டதற்கு முறையான பதில் ஏதும் கூறாமல் வேண்டுமென்றே அங்கும் இங்கும் என அலையவிட்டு அசிங்கப்படுத்தியுள்ளார்கள். திரு.ஜெயப்பாண்டி மற்றும் கோவிந்தராஜ் ஆகிய இவர்கள் இருவரும் லஞ்சமாக பணம் தராத ஒரே காரணத்தில்தான் இவர்கள் விண்ணப்பித்த 6 வீட்டுத்திர்வை பெயர் மாற்றம் விண்ணப்பங்களையும், வேண்டுமென்றே ஒளித்து மறைத்துவிட்டார்கள். சம்பந்தப்பட்ட பில்கலெக்டர்கள் அதன் பிறகு பாதிக்கப்பட்ட எங்களது வார்டு பொதுமக்களான இவர்கள் இருவரும் மனமுடைந்து வந்து எங்களிடம் முறையிட்டார்கள். பின்பு அந்த பகுதியின் மாமன்ற உறுப்பினர் என்ற முறையில் நாங்கள் சம்மந்தப்பட்ட மாநகராட்சி உயர் அதிகாரியான வருவாய் ஆய்வாளர் மற்றும் மாநகராட்சி மேனேஜர் ஆகியோரிடம் கேட்டதற்கு, தவறு செய்தவர்களை காப்பாற்றும் நோக்கத்தில் எங்களை சமாதானம் பண்ணும் முயற்சியில் நீங்கள் விண்ணப்பித்த விண்ணப்பம் காணாமல் போய்விட்டது எங்கு உள்ளது என்றே தெரியவில்லை, ஆதலால் தயவுசெய்து இந்த இருவரின் பிரச்சனையை விட்டு விடுங்கள் என்று ஒரு துளி கூட பொறுப்பில்லாமல் பதில் கூறுகின்றனர். பின்பு இறுதியாக மாநகராட்சி ஆணையாளர் அவர்களிடம் புகார் அளித்தும் எந்த பலனும் இல்லை. பாதிக்கப்பட்டவர்களுடைய மாமன்ற உறுப்பினர் என்ற முறையில் நாங்கள் ஆணையாளரிடம் நேரில் சென்று, உள்நோக்கத்தோடு வேண்டுமென்றே ஒளித்து மறைத்து வைத்துவிட்டு விண்ணப்பித்த விண்ணப்பங்களை காணவில்லை என்று பொய்சொல்கின்ற மாநகராட்சி சம்மந்தப்பட்ட அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கும்படியும் மேலும் அதிகாரிகள் ஒளித்து மறைத்து வைத்துள்ள விண்ணப்பங்களை வாங்கி உடனே வேலையை முடித்து தாருங்கள் என்று கேட்டதற்கு " அப்படியெல்லாம் நீங்கள் சொல்வதை போல அதிகாரிகள் மீது நடவடிக்கை எல்லாம் எடுக்க முடியாது. வேண்டுமென்றால் மறுபடியும் அவர்களை மீண்டும் விண்ணப்பக்கட்டணம் செலுத்தி விண்ணப்பிக்கச்சொல்லுங்கள்" என்று துளிகூட பொறுப்பில்லாமல் தவறு செய்தவர்களை காப்பாற்றும் நோக்கத்தில் ஒரு மக்கள் பிரதிநிதியான எங்களிடமே கோபத்துடன் திமிராக பேசினார் மாநகராட்சி ஆணையாளர். இப்படி மாநகராட்சியில் பணிபுரியும் ஒரு சில அதிகாரிகள் பொறுப்பில்லாமல் தொடர்ந்து செயல்படுவதாலும், அவர்களுக்கு மேல் உள்ள உயர் அதிகாரிகள் ஒருமுறை கூட அவர்கள் செய்த தவறுகளுக்காக அவர்களை கண்டிக்காமலும், தண்டிக்காமலும் வேண்டுமென்றே ஏதோ உள்நோக்கத்தோடு, விட்டுவிடுவதால்தான் பாதிக்கப்பட்ட இவர்கள் இருவரைப்போல் பொதுமக்கள் பலரும் மனதளவில் பாதிக்கப்பட்டு அங்கும் இங்கும் என அலைந்து திரிந்து மன உளைச்சலுக்கு ஆளாகின்றனர். ஆதலால் பெருமதிப்பிற்குரிய தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்கள் பாதிக்கப்பட்ட எங்களது வார்டைச்சேர்ந்த இவர்கள் இருவருக்கும், மீண்டும் மீண்டும் விண்ணப்பக்கட்டணம் செலுத்தாமல் அதிகாரிகள் ஒளித்து மறைத்து வைத்திருக்கும் விண்ணப்பத்தின் மூலம் உடனடியாக வீட்டுத்தீர்வை பெயர்மாற்றம் செய்துதரக்கோரியும் மற்றும் இப்புகார் தொடர்பாக சம்பந்தப்பட்ட அனைத்து அதிகாரிகளின் மீதும் கடும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறோம்" என தெரிவித்துள்ளனர்.

2) இம்மனு தொடர்பாக இம்முறைமன்ற நடுவ 31.03.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் சிவகாசி மாநகராட்சி ஆணையரின் அறிக்கை கோரப்பட்டது.

3) சிவகாசி மாநகராட்சி ஆணையாளர்(பொ) தனது 18.04.2023 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

" புகார் மனுவில் தெரிவித்துள்ள திருமதி.கோமளா தேவி, வருவாய் உதவியாளர் அவர்கள் தனது பணியில் மெத்தன போக்கு காரணமாக பல கோப்புகள் நிலுவையில் வைத்ததன் காரணமாக பொது மக்களிடம் இருந்து புகார்கள் வந்தவண்ணம் இருந்தது. இதனால் வருவாய் ஆய்வாளர் தலைமையில் குழு அமைத்து கண்காணித்தபோது அதிக அளவில் கோப்புகள் நிலுவையில் இருந்தது தெரிய வந்தது. அதனை தொடர்ந்து திருமதி.கோமளா தேவி, வருவாய் உதவியாளர் அவர்கள் 07.12.2022 பிற்பகல் முதல் தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டு உள்ளார். அன்னாருக்கு நிலுவை கோப்புகள் ஒப்படைக்க தெரிவிக்கப்பட்டுள்ளது. அன்னார் இதுநாள் வரை ஒப்படைப்பு செய்யவில்லை என்ற விபரத்தினையும் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் மாமன்ற உறுப்பினர் திருமதி. எம்.இந்திராதேவி தெரிவித்த சொத்துவரி பெயர்மாற்றம் கோப்பு பெயர் மாதவன் பெயரிலிருந்து சுந்தரராஜ் பெயருக்கு மாற்றம் செய்யும் கோப்பும் மற்றும் மாதவன் பெயரிலிருந்து ஜெயபாண்டி, சுபத்ரா என்ற பெயருக்கு மாற்றம் செய்யும் கோப்புகள் கிடைக்கப்பெற்று பெயர்மாற்றம் செய்யப்பட்ட நகல் மனுதாருக்கு சார்பு செய்யப்பட்டுவிட்டது என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

4) இம்மனு தொடர்பாக மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 20.04.2023 அன்று நாகர்கோவில் முகாமில் நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகும்படி 11.04.2023 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5) மனுதாரர் திரு. மாரீஸ்வரன் அவர்கள் தனது மனைவி சார்பாகவும் 20.04.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி பின்வருமாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:

" சிவகாசி மாநகராட்சி, 5வது வார்டில் உள்ள திருவாளர்கள் M.ஜெயபாண்டி மற்றும் R.கோவிந்தராஜ் ஆகியோர் வீட்டுத்தீர்வை பெயர் மாற்றம் செய்வதற்காக சிவகாசி மாநகராட்சிக்கு 1 வருடத்திற்கும் முன் விண்ணப்பம் செய்து அதற்கான கட்டணமும் செலுத்தியுள்ளனர். ஆனால் பெயர் மாற்றம் இதுவரை செய்யவில்லை. இது குறித்து சம்பந்தப்பட்ட பில் கலெக்டர்களான திருமதி.கோமளா தேவி மற்றும் திரு.அகமது உமர் ஆகியோரிடம் கேட்டதற்கு முறையான பதில் ஏதும் கூறாமல் மனுக்கள் தொலைந்துவிட்டதாகவும், பெயர் மாற்றப்பணியை செய்திட கையூட்டும் கேட்டும் பொறுப்பில்லாமல் அலைக்கழித்து வருகின்றனர். இதுகுறித்து மாநகராட்சி ஆணையர் வரை சென்று கோரிக்கை விடுத்தும் பலனில்லை. மேற்கண்ட ஜெயபாண்டி மற்றும் கோவிந்தராஜ் ஆகியோருக்கு வீட்டுத்தீர்வை பெயர் மாற்றம் செய்து வழங்கிட ஆவன செய்திடவும், தாமதத்திற்கு காரணமான சம்பந்தப்பட்ட மாநகராட்சி அலுவலர்கள் மீது கடும் ஒழுங்கு நடவடிக்கை எடுத்திடவும் இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

6) 20.04.2023 அன்று நாகர்கோவில் முகாமில் நடைபெற்ற நேரடி விசாரணையில் சிவகாசி மாநகராட்சியின் மேலாளர் மற்றும் வருவாய் ஆய்வாளர் இருவரும் ஆஜராகி கீழ்க்கண்ட தங்களது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளனர்:

" மனுதாரர் தனது மனுவில் M.ஜெயபாண்டி மற்றும் R.கோவிந்தராஜ் ஆகியோர் வீட்டுத்தீர்வை பெயர் மாற்றம் செய்வது தொடர்பாக அளித்துள்ள புகார் மனுவையொட்டி, மாநகராட்சியில் பெயர்மாற்றம் செய்வது தொடர்பாக பல மனுக்கள் தேங்கியிருந்ததையொட்டி அதற்கு பொறுப்பான திருமதி கோமளா தேவி, வருவாய் உதவியாளர் 7.12.2022 முதல் தற்காலிகப் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளார். மேலும் மனுதாரர்கள் பெயர் மாற்றம் செய்வது குறித்து 3 மனுக்கள் அளிக்கப்பட்டதில் அதில் இரண்டு மனுக்களில் உள்ள நபர்களுக்கு பெயர்

மாற்றம் செய்யப்பட்டுவிட்டது என்கின்ற விவரத்தை தெரிவித்து அதன் நகல்களை மனுதாரர்களுக்கு அளிக்கப்பட்டுவிட்டது என்பதையும், மேலும் நிலுவையில் உள்ள மனுவில் கண்டுள்ள வீட்டின் பத்திரத்தின் நகல்களை மாநகராட்சியில் அளித்தவுடன் மேற்கண்ட பெயர் மாற்றம் செய்து கோரிக்கை நிறைவேற்றப்படும் என்கின்ற விவரத்தை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம்" என பதிவு செய்துள்ளனர்.

7) மனுதாரர் புகார் மனு, மனுதாரரின் வாக்குமூலம், மற்றும் சிவகாசி மாநகராட்சி ஆணையரின் அறிக்கை, சிவகாசி மாநகராட்சி மேலாளர் மற்றும் வருவாய் ஆய்வாளர் ஆகியோரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:

மனுதாரர்கள் " சிவகாசி மாநகராட்சி, 5வது வார்டில் உள்ள திருவாளர்கள் M.ஜெயபாண்டி மற்றும் R.கோவிந்தராஜ் ஆகியோர் வீட்டுத்தீர்வை பெயர் மாற்றம் செய்வதற்காக சிவகாசி மாநகராட்சிக்கு 1 வருடத்திற்கும் முன் விண்ணப்பம் செய்து அதற்கான கட்டணமும் செலுத்தியுள்ளனர். ஆனால் பெயர் மாற்றம் இதுவரை செய்யவில்லை. இது குறித்து சம்பந்தப்பட்ட பில் கலெக்டர்களான திருமதி.கோமளா தேவி மற்றும் திரு.அகமது உமர் ஆகியோரிடம் கேட்டதற்கு முறையான பதில் ஏதும் கூறாமல் மனுக்கள் தொலைந்துவிட்டதாகவும், பெயர் மாற்றப்பணியை செய்திட கையூட்டும் கேட்டும் பொறுப்பில்லாமல் அலைக்கழித்து வருகின்றனர். ஆகவே வீட்டுத்தீர்வை பெயர் மாற்றம் செய்து வழங்கிட ஆவன செய்திடவும், தாமதத்திற்கு காரணமான சம்பந்தப்பட்ட மாநகராட்சி அலுவலர்கள் மீது கடும் ஒழுங்கு நடவடிக்கை எடுத்திடவும் இம்முறைமன்றத்தை கேட்டுள்ளனர்.

மனுதாரர் குறிப்பிட்டுள்ள 3 மனுக்களில் இரண்டு மனுக்களில் உள்ள நபர்களுக்கு பெயர் மாற்றம் செய்யப்பட்டு அதன் நகலும் மனுதாரர்களுக்கு அளிக்கப்பட்டது எனவும் நிலுவையில் உள்ள மனு தொடர்பாக மனுதாரர் பத்திர நகல்கள் மாநகராட்சியில் அளித்தவுடன் பெயர் மாற்றம் செய்யப்படும் என்பதை சிவகாசி மாநகராட்சி வருவாய் ஆய்வாளர் மற்றும் மேலாளரின் வாக்குமூலத்திலிருந்து அறியமுடிகிறது.

2014 ஆம் ஆண்டைய தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவச்சட்டம் (ம) விதிகளில் இம்முறைமன்றத்திற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையிலும், குறிப்பாக:–

<u>பிரிவு " 7 " The Ombudsman shall perform all or any of the following functions, namely:-</u>

<u>7 (c) where the irregularity is due to wilful negligence or dereliction of duty of any officer or employee of the local body, recommend for departmental action by the appropriate authority under the relevant rules அடிப்படையிலும்,</u>
இந்நிகழ்வில் பின்வருமாறு இம்முறைமன்றம் ஆணையிடுகிறது.

மனுதாரர் புகார் மனுவில் தெரிவித்துள்ள திருமதி.கோமளா தேவி வருவாய் உதவியாளர் அவர்கள் தனது பணியில் மெத்தன போக்கு காரணமாக பல கோப்புகள் நிலுவையில் வைத்ததன் காரணமாக பொதுமக்களிடம் இருந்து புகார்கள் வந்த வண்ணம் உள்ளது. இதனால் வருவாய் ஆய்வாளர் தலைமையில் குழு அமைத்து கண்காணித்தபோது அதிக

அளவில் கோப்புகள் நிலுவையில் இருந்தது தெரியவந்தது. அதனைத் தொடர்ந்து திருமதி. கோமளாதேவி, வருவாய் உதவியாளர் அவர்கள் 07.12.2022 பிற்பகல் முதல் தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டு உள்ளார். அன்னாரிடம் நிலுவை கோப்புகளை ஒப்படைக்க தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் இதுநாள் ஒப்படைப்பு செய்யவில்லை. மேலும் மாமன்ற உறுப்பினர் திருமதி எம்.இந்திராதேவி தெரிவித்துள்ள சொத்துவரி பெயர்மாற்றம் கோப்பு பெயர் மாதவன் பெயரிலிருந்து சுந்தரராஜ் பெயருக்கு மாற்றம் செய்யும் கோப்பு மற்றும் மாதவன் பெயரிலிருந்து ஜெயபாண்டி, சுபத்ரா என்ற பெயருக்கு மாற்றம் செய்யும் கோப்புகள் கிடைக்கப்பெற்று பெயர்மாற்றம் செய்யப்பட்ட நகல் மனுதாரருக்கு சார்பு செய்யப்பட்டுவிட்டது என்பது சிவகாசி மாநகராட்சி ஆணையரின் அறிக்கையிலிருந்து தெரிய வருகிறது.

வீட்டுத்தீர்வை பெயர் மாற்றம் செய்வது தொடர்பாக மனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டு ஓர் ஆண்டிற்கும் மேல் ஆகியும் எந்த நடவடிக்கையும் இல்லாததுடன் அது தொடர்பான விண்ணப்பங்கள் காணாமல் போய்விட்டது என்று மாநகராட்சி அலுவலர்கள் தெரிவித்துள்ளதை சாதாரணமாக ஏற்றுக்கொள்ள இயலாது. இது மாநகராட்சி அலுவலர்கள் அலட்சியமாகவும், மெத்தனமாகவும் இருந்துள்ளதை காண்பிக்கிறது. இதனை இம்முறைமன்ற நடுவம் வன்மையாக கண்டிக்கிறது. மேலும் மனுதாரர்களின் மன உளைச்சலுக்கு பொறுப்பானவர்கள் மீது கடுமையான ஒழுங்குநடவடிக்கை மேற்கொள்ள ஆணையர், சிவகாசி மாநகராட்சிக்கு பரிந்துரை செய்வதுடன்அதன் விவரத்தினை இம்முறைமன்ற நடுவத்திற்கு அனுப்புமாறும் ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது. மேலும் இதுபோன்ற தவறுகள் இனி வருங்காலங்களில் நடைபெறாதவண்ணம் தக்க நடவடிக்கை எடுத்திட சிவகாசி மாநகராட்சி ஆணையரை இம்முறைமன்ற நடுவம் அறிவுறுத்துகிறது.

Substantive punishment should be awarded to the delinquent officials who are the sources of this abnormal delay, inaction and denial of service to the applicants who applied for change of name as per changed ownership of the property. This kind of employees does not deserve to continue in service with their bizarre mind set and autocratic conduct as public servants. The supervisory hierarchy of this subject has defaulted in discharging their duties sincerely and effectively by way of not reviewing the pendency of applications received from the public. The supervisory officials like the R.I. should be pulled up strongly with disciplinary action for the delay of 1 year in carrying out the name changes as requested by the applicants. The Corporation Commissioner, Sivakasi is directed to keep his house of administration in order to avoid complaints of this nature in future. He should review pendency of applications in different departments under his control and ensure clear state of disposals.

The pending name transfer should be completed within 10 days from the date when the copies of documents are submitted by the applicant as assured by the Manager of the Corporation in her deposition. The delinquent officials who had the original letters and the R.I. who slept for 1 year over this shabby delay should not be spared. These elements bring bad name to the Corporation and Local Administration of the State by their self willed disobedient and wooden conduct in the process of the public service.

DMA to keep a surveillance over the Sivakasi Corporation functioning in the area of services to the local public to avert recurrence of such dereliction of duties by the staff.

A copy of this orders is marked to Government in MAWS Department for information.

2023-ஆம் ஆண்டு மே திங்கள் 03-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1)திருமதி.M.இந்திராதேவி
G.மாரீஸ்வரன்,
எண்.6/4, சுப்பிரமணியர் கோவில் முதல் தெரு
திருத்தங்கல் – 626 130.
சிவகாசி.

2)ஆணையர்,
சிவகாசி மாநகராட்சி, சிவகாசி

3)அரசு கூடுதல் தலைமைச்செயலர்,
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை,
தலைமைச்செயலகம்,
புனித ஜார்ஜ் கோட்டை,
சென்னை – 600 009.

4)நகராட்சிநிர்வாகஇயக்குநர்,
நகராட்சிநிர்வாகஇயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை– 600 028.

5)இணைஇயக்குநர்
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சிநிர்வாகஇயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை– 600 028.

நகல்.
மாண்புமிகுமுறைமன்றநடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

உதவி பதிவாளர்